# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2139/47 - 2019 සැප්තැම්බර් මස 04 වැනි බදාදා - 2019.09.04

*2139/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

*எனது இல. 01/10/03/04*

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவின் கீழ், ஊவா மாகாண கௌரவ ஆளுநர் சனாதிபதி சட்டத்தரணி மார்ஷல் பெரேரா அவர்களால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

1. மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ஆர். எம். எஸ். எல். பீ. ரத்னாயக அவர்கள், 2019.05.13 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு.

2. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஏ. ஏ. எல். அமரசேகர அவர்கள், உடனடியாகச் செயற்படும் வகையில் (2019.05.15 ஆந் திகதி முதல்) பதுளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளர் பதவியின் பணிகளை முழுநேர அடிப்படையில் பணியாற்றுவதற்கு.

3. வைத்தியர் (திருமதி) ஜே. சீ. எம். தென்னகோன் அவர்கள், 2019.06.06 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளராக.

4. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திருமதி ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க அவர்கள், 2019.07.23 ஆந் திகதி முதல் 2019.11.30 ஆந் திகதி வரை ஊவா மாகாண சபையின் சபைச் செயலாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள் பணியாற்றுவதற்கு.

5. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. தயானந்த ரத்னாயக அவர்கள், 2019.07.22 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண சபையின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், சுற்றுலாத்துறை, போக்குவரத்து, கலாசாரம் மற்றும் நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் தொடர்பான அமைச்சின் செயலாளராக முழுநேர அடிப்படையில் பதில் கடமையாற்றுவதற்கு.


1A - PG 4639— 67 (2019/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எச். எம். வசந்த கித்சிரி பண்டார அவர்கள், உடனடியாகச் செயற்படும் வகையில் (2019.07.23 ஆந் திகதி முதல்) தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக ஊவா மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

7. ஊவா மாகாண பொறிமுறைப் பணிப்பாளர் பொறியியலாளர் திரு. எஸ். என். பீ. எம். பத்மசிரி அவர்கள், 2019.07.10 ஆந் திகதி முதல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதால், அவர் மீளச் சேவைக்குத் திரும்பும் வரை, 2019.07.10 ஆந் திகதி முதல் இலங்கைப் பொறியியல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். டி. ஜீ. ஏ. என். லக்மால் அவர்கள், தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக ஊவா மாகாண பொறிமுறைப் பணிப்பாளர் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு.

8. இலங்கைப் பொறியியல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஏ. ஏ. பீ. எஸ். கே. கருணாரத்ன அவர்கள், 2018.10.12 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண பிரதித் தலைமைச் செயலாளராக (பொறியியல்).

9. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். எச். சீ. பிரியன்தி அவர்கள், உடனடியாகச் செயற்படும் வகையில் (2019.07.24 ஆந் திகதி முதல்) ஊவா மாகாண காணி ஆணையாளர் பதவியின் பணிகளை முழுநேர அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு.

10. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். எம். விஜேனாயக அவர்கள், தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக, உடனடியாகச் செயற்படும் வகையில் (2019.07.24 ஆந் திகதி முதல்) ஊவா மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பதில் கடமையாற்றுவதற்கு.

ஆர். எம். டீ. பி. ஹாதியல்தெனிய,
ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்.
2019, ஓகத்து 30.

09-595

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.